தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2010

வகுப்பு: பாலர் திகதி:- 19-06-2010 நேரம்: 2 மணித்தியாலம்

ஆசிரியர்கள்: திருமதி ப இராமகிருஷ்ணசுவாமி
திருமதி க விக்னேஸ்வரன்

1. உங்கள் பெயரை எழுதுங்கள். (6 புள்ளிகள்)

______________________________________________

2. உயிர் எழுத்துக்களையும் ஆய்த எழுத்தையும் எழுதுக. (13 புள்ளிகள்)

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

3. படங்களுடன் பொருத்தமான சொல்லை இணைக்கவும் .
(10 புள்ளிகள்)

| | |
|---|---|
|  | கண் |
|  | நீள்சதுரம் |
|  | ஊஞ்சல் |
|  | முக்கோணம் |
|  | ஆடு |

4. படங்களுக்குரிய சரியான சொல்லைத் தெரிந்து எழுதுங்கள்.

(20 புள்ளிகள்)

| ஆமை | ஏணி | மயில் | கிளி | பசு |
|---|---|---|---|---|

| | |
|---|---|
|  | |
|  | |
|  | |
|  | |
|  | |

5. சொல்வதை எழுதுங்கள்.

(20 புள்ளிகள்)

6. பார்த்து எழுதுங்கள்.

(10 புள்ளிகள்)

| | |
|---|---|
| தமிழ் | ______ |
| வகுப்பு | ______ |
| பாடசாலை | ______ |
| ஆசிரியர் | ______ |

7. ஒவ்வொரு படத்திற்கும் உரிய நிறத்தைத் தீட்டுக.
(21 புள்ளிகள்)

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

---

# அரையாண்டுப் பரீட்சை 2010

வகுப்பு: ஒன்று    திகதி:- 19-06-2010    நேரம்: 2 மணித்தியாலம்

ஆசிரியர்கள்: திருமதி ச பாலகங்காதரன்
திருமதி க வடிவேற்பிள்ளை

**மாணவர் பெயர்:-**

---

1. உரிய எழுத்தை தெரிந்தெடுத்து சொற்களைப் பூர்த்தி செய்க. (10 புள்ளிகள்)




- த______பி
- அக்______
- முத்______ம்
- புத்த______ம்
- நட______ம்

2. பின்வரும் படங்களின் பெயர்களை எழுதுக.

(10 புள்ளிகள்)

| | |
|---|---|
|  | |
|  | |
|  | |
|  | |
|  | |

3. கட்டங்களில் பெயர்களை வகைப்படுத்தி எழுதுக.
(20 புள்ளிகள்)

| | |
|---|---|
| மாம்பழம் | அன்னாசிப்பழம் |
| செவ்வந்திப்பூ | திராட்சைப்பழம் |
| வாழைப்பழம் | வாடாமல்லிகை |
| தாமரைப்பூ | மல்லிகைப்பூ |
| மாதுளம்பழம் | முல்லைப்பூ |

| பழங்கள் | பூக்கள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

4. சொல் உருவாக்குக.

(20 புள்ளிகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| ச | ர | ந் | ன் | தி |

_______________________

| | | | |
|---|---|---|---|
| டி | செ | பூ | ச் |

_______________________

| | | |
|---|---|---|
| க | ம் | மே |

_______________________

| | | |
|---|---|---|
| ங் | கை | த |

_______________________

| | | | | |
|---|---|---|---|---|
| ள் | பா | டு | க | ங் |

_______________________

5. **இரண்டு முறை பார்த்து எழுதுக.**

(10 புள்ளிகள்)

எனக்குத் தமிழ் படிக்க விருப்பம்.

____________________________________________________________

____________________________________________________________

6. **உறவுமுறைச் சொற்களுக்கு ✓ இடுக**

(10 புள்ளிகள்)

☐ அம்மா.

☐ மாமி.

☐ முருகன்.

☐ தாத்தா.

☐ பட்டம்.

7. பொருத்தமான படம் கீறி வர்ணம் தீட்டுக.

(20 புள்ளிகள்)

| | |
|---|---|
| மாங்காய் | தாமரை |
| நீலமேகம் | எலுமிச்சம்பழம் |
| புல் | |

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2010

வகுப்பு: இரண்டு திகதி:- 19-06-2010 நேரம்: 2 மணித்தியாலம்

ஆசிரியர்கள்: திருமதி செ ஜெயமனோகர்
திருமதி க வனதேவா

**மாணவர் பெயர்:-**

1. கீழே காணப்படும் பந்தியை வாசித்து ஒரு சொல்லில் பதில் எழுதுக.

(15 புள்ளிகள்)

மயில் ஒரு அழகான பறவை. ஆண்மயிலுக்குத் தோகை உண்டு. அதன் தோகையில் நீலநிறப் புள்ளிகள் காணப்படும். ஆண் மயில் தோகையை விரித்து ஆடும். பெண் மயில் முட்டை இடும். அது அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும். மயில் காடுகளில் வசிக்கும். மயிலை நாம் மிருகக் காட்சிச் சாலைகளில் பார்க்கலாம்.

1.1 அழகாக ஆடும் பறவை எது?

_______________________________________________

1.2 மயில் எதை விரித்து ஆடும்?

_______________________________________________

1.3 மயிலின் தோகையில் என்ன நிறப் புள்ளிகள் உண்டு?

_______________________________________________

1.4 முட்டை இட்டுக் குஞ்சு பொரிப்பது எது?

_______________________________________________

1.5 மயிலை நாம் எங்கே பார்க்கலாம்?

_______________________________________________

2. கோடிட்ட இடங்களை நிரப்புக. (10 புள்ளிகள்)

| பழச்சாறு | வர்ணம் | தொலைக்காட்சி | சூரியன் | நண்பர்கள் |
|---|---|---|---|---|

- ____________________ கிழக்கில் உதிப்பான்.
- கண்ணனும் அமலனும் ____________________.
- வாணி படத்திற்கு ____________________ தீட்டினாள்.
- சாந்தி ____________________ குடித்தாள்.
- அமலனும் கோமதியும் ____________________ பார்த்தார்கள்.

3. தொடர்பு படுத்துக. (10 புள்ளிகள்)

| | |
|---|---|
|  | வீடு |
|  | பழம் |
|  | பூக்கள் |
|  | குதிரை |
|  | பூனை |

4. **குழம்பியுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி வசனமாக எழுதவும்.**

(15 புள்ளிகள்)

- பெற்றோர் / இவர்கள் / எங்கள்

______________________________________________

- வசிக்கும் / யானை / காட்டில்

______________________________________________

- நிலா / வரும் / இரவில்

______________________________________________

- அழகானவை / பூக்கள்

______________________________________________

- அம்மாவின் / மாமா / தம்பி

______________________________________________

5. உரிய எழுத்தை எழுதி நிரப்புக. (10 புள்ளிகள்)




- இருந்______ன்

- எ______தினேன்

- ப______த்தான்

- அ______ந்தினாள்

- ந______ந்தார்

6. **சரியான ஒழுங்கில் இலக்கமிட்டு வாசிக்கவும்.**

(10 புள்ளிகள்)

☐ பல் துலக்கி முகம் கழுவினார்கள்.

☐ பாடசாலைக்குச் சென்றார்கள்.

☐ வாணியும் கமலனும் காலை எழுந்தார்கள்.

☐ தமது பைகளை எடுத்தார்கள்.

☐ காலை உணவு அருந்தினார்கள்.

7. **ஐந்து சொற்களைக் கண்டு பிடியுங்கள்.**

(10 புள்ளிகள்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கு | ப | பூ | க் | க | ள் |
| ம | தி | ழ | ச் | டை | டி |
| ப | ல் | ரை | ம் | சி | ல |

- ________________________
- ________________________
- ________________________
- ________________________
- ________________________

8. **பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி மூன்றிற்கு மேற்பட வசனங்கள் எழுதுக.**

(20 புள்ளிகள்)

- நான்
- எனது குடும்பம்
- எனது பொழுதுபோக்கு

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

---

# அரையாண்டுப் பரீட்சை 2010

வகுப்பு: மூன்று    திகதி:- 19-06-2010    நேரம்: 2 மணித்தியாலம்

ஆசிரியர்: திருமதி நி தயாளன்

**மாணவர் பெயர்:-**

**1. கீழ்வரும் பாடலை வாசித்துத் தரப்பட்ட வினாக்களுக்கு விடைதருக.**

(20 புள்ளிகள்)

சிட்னி துறைமுகப் பாலம் – நாம்
சென்று பார்க்க நல்ல பாலம்
எட்ட நின்று பார்க்கும் போது – அதில்
எறும்பு போலக் கார்கள் போகும்
ஏறி நின்று பார்த்தால் – சிட்னி
எல்லாம் காட்டும் பாலம்
சீறி வரும் அலைகள் மேலே – நல்ல
சிற்பம் போல் நிற்கும் பாலம்
இரும்பு கொண்டு கட்டிய பாலம்
இன்று திடமாய் நிற்கும் பாலம்
விரும்பி நாம் பார்க்கும் பாலம்
வில்லுப் போல வளைந்த பாலம்
எண்ணில் அடங்கா மக்கள்
ஏறிப் பார்த்த பாலம்
மண்ணில் அவுஸ்திரேலியாவின்
மகிமை சொல்லும் பாலம்

– வேந்தனார் இளங்கோ

1.1 இந்தப் பாலம் எங்கு உள்ளது?

---

1.2 இதில் ஏறி நின்று பார்த்தால் கார்கள் எல்லாம் எப்படித் தெரியும்?

---

1.3 எதனால் கட்டிய பாலம்?

---

1.4 இந்தப் பாலம் எதைப் போல இருக்கும்?

---

1.5 இந்தப் பாட்டை எழுதியவர் யார்?

---

2. **சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக.** (10 புள்ளிகள்)

- நேற்று மழை (பெய்யும், பெய்கிறது, பெய்தது)
- தாத்தா நாளை (வந்தார், வருவார், வருகிறார்)
- நாம் இப்போது பரீட்சை (எழுதினோம், எழுதுகின்றோம், எழுதுவோம்)
- போன வாரம் அக்கா கன்பரா (போனார், போகின்றார், போவார்)
- அங்கே பார்! குதிரைகள் (மேய்ந்தன, மேய்கின்றன, மேயும்)

3. **பிழையைத் திருத்தி எழுதுக.** (10 புள்ளிகள்)

- மீன்கள் நீந்தியது.

---

- பறவைகள் பறந்தது.

---

- கோயில் இருந்தன.

---

- குயில்கள் கூவியது.

---

- பழங்கள் விழுந்தது.

---

4. எதிர்ச் சொல் எழுதுக. (10 புள்ளிகள்)

| | |
|---|---|
| இன்பம் | |
| புதியது | |
| பெரியது | |
| நன்மை | |
| மேடு | |

5. ஒத்தசொல் எழுதுக. (10 புள்ளிகள்)

| | |
|---|---|
| இறைவன் | |
| ஆலயம் | |
| வீடு | |
| போ | |
| உரையாடு | |

**6. இரு சொற்களைக் கண்டு பிடியுங்கள்.** (10 புள்ளிகள்)

உதாரணம்: வளையல்கள் - <u>வயல்</u> <u>கல்</u>

- பாவாடை ____________________ ____________________
- ஆடைகள் ____________________ ____________________
- கால்வாய் ____________________ ____________________
- உரையாடல் ____________________ ____________________
- போனார்கள் ____________________ ____________________
- பார்வை ____________________ ____________________
- கதைகள் ____________________ ____________________
- கல்வி ____________________ ____________________
- தலைவலி ____________________ ____________________
- காணவில்லை ____________________ ____________________

7. **குழம்பியுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி வசனமாக எழுதவும்.**
(10 புள்ளிகள்)

- வாணி / நான் / சொன்னாள் / கேட்க

______________________________________________

______________________________________________

- கதைகள் / நல்ல / கேட்கலாம் / தாத்தாவிடம்

______________________________________________

______________________________________________

- சென்றது / மகிழ்ச்சியாக / அது / பறந்தது

______________________________________________

______________________________________________

- வந்தது / யோசனை / காகத்துக்கு / ஒரு

______________________________________________

______________________________________________

- திரும்பினார் / ஏழு மணிக்கு / இரவு / அப்பா / வீடு

______________________________________________

______________________________________________

8. **பின்வருவனவற்றைப் பற்றி 5 வசனங்கள் எழுதுக.** (20 புள்ளிகள்)

- அன்பு தினம்
- எனது பொழுது போக்கு

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2010

வகுப்பு: நான்கு திகதி:- 19-06-2010 நேரம்: 2 மணித்தியாலம்

ஆசிரியர்: திரு சிவா சிவானந்தா

**மாணவர் பெயர்:-**

**1. கீழ் தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து அனைத்து வினாக்களுக்கும் விடைதருக.**

(10 புள்ளிகள்)

சுப்பிரமணிய பாரதியார்.

பாரதியார் தமிழ் நாட்டில் உள்ள எட்டயபுரம் என்னும் ஊரில் பிறந்தார்.

இவர் பாரதியார் என்றும் மகாகவி என்றும் அழைக்கப்படுகிறார். இவர் ஒரு கவிஞர், எழுத்தாளர், பத்திரிகை ஆசிரியர், விடுதலை வீரர், சமூகசீர்திருத்தவாதி எனப் பல்வேறு பரிமாணங்கள் கொண்டவர். இவரது இயற்பெயர் சுப்பிரமணியன். இவர் கவிதை உரைநடை என்பவற்றில் மிகவும் சிறந்து விளங்கினார்.

பாரதியார் தமது எழுத்தினால் மக்களின் மனதில் சுதந்திர உணர்ச்சியைத் தூண்டினார்.

இவர் தமிழ், தமிழர் நலன், பெண்விடுதலை, சாதிமறுப்பு என்பவற்றில் அதிக ஈடுபாடுகொண்டவர்.

பாரதியார் நமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராது இருத்தல் என்று சொல்வது மட்டுமன்றி அப்படியே வாழந்தவர்.

பாரதியார் தம் தாய்மொழி மேல் கொண்ட பற்றினால் ‘‘யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்’’ என்று பாடினார்.

இவர் சமஸ்கிருதம், வங்காளம், ஹிந்தி, பிரெஞ்சு, ஆங்கிலம் போன்ற மொழிகளை நன்கு அறிந்திருந்தார்.

1.1 பாரதியார் வேறு என்ன பெயர்களால் அழைக்கப்பட்டார்?

1.2 பாரதியார் தமது எழுத்தினால் மக்களின் மனதில் எதனைத் தூண்டினார்?

1.3 பாரதியார் எந்த மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்று பாடினார்?

1.4 இவருக்கு என்னென்ன மொழிகள் தெரியும்?

1.5 இவர் எப்படி வாழ்ந்தார்?

1. ஒத்தகருத்துச் சொல் தருக. (5 புள்ளிகள்)

| | |
|---|---|
| சந்திரன் | |
| வீடு | |
| உணவு | |
| கனி | |
| புடவை | |

2. எதிர்ச் சொல் தருக. (5 புள்ளிகள்)

| | |
|---|---|
| காலை | |
| எடு | |
| மலை | |
| வெள்ளை | |
| ஓடு | |

3. இசைச்சொல் தருக. (5 புள்ளிகள்)

| | |
|---|---|
| சட்டம் | |
| ஆசை | |
| வடம் | |
| பஞ்சு | |
| வை | |

4. ஆங்கிலச் சொல் தருக. (5 புள்ளிகள்)

| | |
|---|---|
| கண்ணாடி | |
| கதிரை | |
| பாராளுமன்றம் | |
| உணவுவிடுதி | |
| மிருகக்காட்சிச்சாலை | |

5. தமிழ்ச் சொல் தருக. (5 புள்ளிகள்)

| | |
|---|---|
| Tree | |
| Face | |
| Chair | |
| Bicycle | |
| Walk | |

6. **குழம்பியுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி வசனமான எழுதவும்.**
(15 புள்ளிகள்)

- உணவை / அம்மா / காலை / உண்ணும் படி/ சொன்னார்.

- என்றேன்/ கண்ணன்/ பெயர்/ என்

- சூரியன்/ காலையில்/ கிழக்குத் / உதிக்கும்/ திசையில்

- வந்தார்/ சித்தப்பா/ கன்பராவில்/ இரவு/ இருந்து/ நேற்று

- கோயிலுக்கு/ மாமியும்/ போனோம்/ நானும்

7. **பின்வரும் வசனங்களை ஒழுங்கு முறையில் மாற்றி எழுதுக.**

(10 புள்ளிகள்)

- கடவுளை வணங்கினேன்
- காலை உணவு உண்டேன்
- பால் குடித்தேன்
- காலையில் எழுந்தேன்
- அன்று சனிக்கிழமை
- காலைக்கடனை முடித்தேன்
- பாடம் படித்தேன்
- தமிழ்ப்பாட வீட்டுவேலை செய்தேன்
- அம்மாவுக்கு உதவி செய்தேன்
- தமிழப்பாடசாலைக்குப் புறப்பட்டேன்.




**8. மேலுள்ள படத்தின் உதவியுடன் இடைவெளியை நிரப்புக.** (20 புள்ளிகள்)

இது ஒரு சிறுவர் __________. இங்கு பாடசாலை மாணவர்கள் ___________________ விற்கின்றனர். இந்தச் சந்தையில் _______________ பொருட்கள் உள்ளன. அவர்கள் அல்- அக்ஸா எகெட் முன்பள்ளி மாணவர்கள். அது __________________ என்னும் இடத்தில் உள்ளது இங்கு நான்கு ___________ குழந்தைகளும் நான்கு ஆண் குழந்தைகளும் உள்ளனர். நீல நிறத் ______________ அணிந்த மாணவன் கையில் பணம் வைத்திருக்கின்றான். ________________ நிற சட்டை அணிந்த மாணவி கையில் ______________________வைத்திருக்கின்றார். இங்குள்ள பொருட்கள் __________விலையிடப்பட்டுள்ளது. இங்குள்ள பொருட்களில் சில வாழைப்பழம், பப்பாபழம், கீரை, கரும்பு ஆகும்.

9. **உங்களுக்கு பிடித்த ஒரு விடயம் பற்றி** 10 **வசனத்திற்குக் குறையாமல் எழுதுங்கள்.** (20 புள்ளிகள்)

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2010

வகுப்பு: ஐந்து திகதி:- 19-06-2010 நேரம்: 2 மணித்தியாலம்

ஆசிரியர்: திருமதி செ சிவசுப்ரமணியம்

**மாணவர் பெயர்:-**

______________________________________________

1. **கீழ்வரும் கதையைப் படித்துக் கிரகித்து வினாக்களுக்கு விடைதருக.**

ஒரு நாள் ஒரு பூனை எலியைப் பிடித்தது. அந்த எலியை உடனே சாப்பிடாமல் அதனுடன் சிறிது விளையாட விரும்பி எலியை முன்னங் காலால் பிடித்துக் கொண்டு சீறியது. விளையாட்டாகக் கடித்தது. எலி பயந்து நடுங்கியது. ‘‘கீச் கீச்’’ எனக் கத்தியது. அது பூனையைப் பார்த்து ‘‘பூனையாரே, நீங்கள் பெரியவர், நான் சிறியவன். தயவு செய்து என்னை விட்டு விடுங்கள்’’ என்று கெஞ்சியது. எலி பயந்து நடுங்குவதைப் பார்த்து பூனை சிரித்தது. ‘‘எலிப்பிள்ளையே பயப்படாதே’’ என்று சொல்லி எலியை விடுவித்து ‘‘நீ போகலாம்’’ என்று கூறியது. எலி தப்பித்தேன் பிழைத்தேன் என்று ஓடியது. சிறிது தூரம் ஓடிய எலியை மறுபடியும் பூனை பிடித்துக் கொண்டது. இவ்வாறு விடுவதும் பிடிப்பதுமாய் எலியோடு விளையாடியது. எலி வேதனையால் துடிதுடித்தது.

அப்போது ஒரு நாய் வந்தது. நாயைக் கண்ட பூனை எலியை விட்டு விட்டு ஓடப்பார்த்தது. நாய் பூனையைப் பிடித்துக் கொண்டது. எலி ஓடி ஒளித்தது. நாய் பூனையைக் கடித்தது. அதனை உதறி எறிந்தது. பூனை தன்னை விட்டு விடுமாறு நாயிடம் கெஞ்சியது. நாய் பூனையை விட்டுவிட்டுப் பிடித்து காலால் மிதித்தது. பூனை துடிதுடித்தது.

ஒளித்திருந்து இதனைப் பார்த்த எலி ‘‘பூனையாருக்கு நான்பட்ட துன்பம் இப்போதாவது தெரிந்திருக்கும்’’ என்று சொல்லி அப்பால் சென்றது.

i. எலி ஏன் வேதனைப்பட்டது?

________________________________________

________________________________________

ii. எலி தப்புவதற்காக பூனைக்கு என்ன சொன்னது?

________________________________________

________________________________________

iii. பூனை எலியை எவ்வாறு வேதனைப்படுத்தியது?

________________________________________

________________________________________

________________________________________

iv. நாயைக் கண்ட பூனை என்ன செய்தது?

______________________________________________

______________________________________________

______________________________________________

v. எலி முடிவில் என்ன சொல்லி அப்பால் சென்றது?

______________________________________________

______________________________________________

2. **பின்வரும் வசனங்களில் அடிக்கோடிடப்பட்ட சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள சொல்லை வைத்து எழுதுக.**

a. ஆசிரியர் ஆசனத்தில் <u>அமர்ந்தார்</u>.

______________________________________________

b. விழாவின் <u>ஆரம்ப</u> உரை நன்றாக இருந்தது.

______________________________________________

c. ஆசிரியரின் <u>கேள்வி</u> அந்த மாணவனுக்கு விளங்கவில்லை.

______________________________________________

d. அவனது புத்தகம் தொலைந்ததால் அவன் <u>கவலைப்</u>பட்டான்.

______________________________________________

e. பத்து <u>ஆண்டு</u>களின் பின் நீர் அணை நிரம்பியது.

______________________________________________

**3. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களை சரியான ஒழுங்கில் அமைத்து எழுதுக.**

(i) அவற்றை விற்று நிறையப் பணம் சம்பாதித்தான்.
(ii) அந்த நிலத்தில் காய் கறிகளைப் பயிரிட்டான்.
(iii) இராமன் தன் தந்தையின் நிலத்தைக் கொத்திப் பண்படுத்தினான்.
(iv) நிறையக் காய் கறிகள் விளைந்தன.

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

**4. தரப்பட்ட சொற்களை சரியான வடிவத்தில் பயன் படுத்துக.**

உதாரணம்: நாங்கள் ______________ கடிதம் எழுதுவோம். (தமிழ்)
நாங்கள் **தமிழில்** கடிதம் எழுதுவோம்.

- கைகேயி கேட்ட ________________________ தசரதன் கொடுத்தான். (வரங்கள்)
- இராமாயணம் ________________________ எழுதப்பட்ட ஒரு காவியம். (வடமொழி)
- இராமன் வந்து ________________________ தூக்கினான். (வில்)
- தசரதன் ________________________ மன்னன். (அயோத்தி)
- மகன் ______________________________ தசரதன் இறந்தான். (பிரிவு)

**5. சரியான சொல்லைத் தெரிவு செய்க.**

- (தலையில் / தளையில்) தொப்பி அணிந்தேன்.
- இடி முழக்கம் கடுமையாக (ஒளித்தது / ஒலித்தது).
- எங்கள் வீட்டில் இரண்டு (அறைகள் / அரைகள்) உண்டு.
- ஆசிரியர் மாணவனைக் (குரை / குறை) கூறினார்.
- (மாங்கனி / மாங்கணி) மிக இனிமையானது.

**6. பின்வரும் வசனங்களில் அடிக்கோடிடப்பட்ட சொல்லுக்கு எதிர் கருத்துள்ள சொல்லை வைத்து எழுதுக.**

a. நான் ஓட்டப் போட்டியில் முதலாவதாக வந்தேன்.

______________________________

b. என் நண்பன் ஒரு வீரன்.

______________________________

c. மகன் தந்தைக்கு மரியாதை செய்தான்.

______________________________

d. அப்பா என்னிடம் இரகசியமாகக் கூறினார்.

______________________________

e. சேவகன் தலைவனிடம் நீதி கேட்டான்.

______________________________

**7. பின்வரும் வாக்கியங்களைப் பன்மையில் எழுதுக.**

a. குருவி பறந்தது.

______________________________

b. அவன் கடைக்குப் போனான்.

______________________________

c. நாய் வாலை ஆட்டியது.

______________________________

d. நீ எங்கு போனாய்?

______________________________

e. நான் பாடசாலைக்குப் போனேன்.

8. **அடைப்புக் குறிக்குள் தரப்பட்ட சொற்களை எதிர் காலத்தைக் காட்டும் வினைச் சொற்களாக மாற்றி எழுதுக.**

ய. நான் அடுத்த முறை அதிக நாட்கள் ___________________. (தங்கு)

டி. நான் உங்கள் அப்பாவிற்கு ___________________. (அறிவி)

உ.நாங்கள் தமிழில் கடிதம் ___________________. (எழுது)

ன. அவர் மீண்டும் என்னை ___________________. (சந்தி)

ந. நீங்கள் எப்போதும் நடனம் ___________________ ? (ஆடு)

9. **பின்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவற்றைக் கண்டறிந்து கீழே உள்ள அட்டவணையில் எழுதுங்கள்.**

(i) திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார்.

(ii) காந்தியடிகள் இந்தியாவின் விடுதலைக்காக உழைத்தார்.

(iii) நீ உண்மையைக் கூறு.

(iv) பாரதிதாசன் பாரதியாரைப் புகழ்ந்தார்.

(iv) சிற்பங்கள் கோபுரங்களை அலங்கரிக்கின்றன.

| எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |
|---|---|---|
| i. | | |
| ii. | | |
| iii. | | |
| iv. | | |
| v. | | |

10. **பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு தலைப்பைத் தெரிவு செய்து 15 வசனங்களுக்குக் குறையாமல் எழுதுக.**

i. தமிழ் வளர்த்த பெரியார் ஒருவர்
ii. உமக்குப் பிடித்த விளையாட்டு, பொழுதுபோக்கு
iii. நீர் பார்த்து மகிழ்ந்த திரைப்படம்
iv. சென்ற பாடசாலை விடுமுறையை எவ்வாறு கழித்தீர்?
v. உமது முதல்நாள் பாடசாலை அனுபவம்
vi. உம்மால் மறக்கமுடியாத நிகழ்ச்சி
vii. தைப்பொங்கல்
viii. புது வருடப்பிறப்பு

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2010

வகுப்பு: ஆறு திகதி: 19.06.2010 நேரம்: 2 மணி

ஆசிரியர்: திருமதி குலராஜா

மாணவர் பெயர்:

## எல்லா வினாக்களுக்கும் விடை தருக

1. ‘மகாகவி பாரதியார்’ என்ற தலைப்பிலான பின்வரும் உரைப் பகுதியை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு பூரணமான விடை தருக:

### மகாகவி பாரதியார்

காலம் தந்த கவிஞனும், காலத்தை வென்ற கவிஞனும் மகாகவி பாரதியாவார். தமிழிலே ஒரு பெரிய மறுமலர்ச்சியையும், விழிப்புணர்வையும் உண்டாக்கியவர் பாரதியார்.

இவர் 1882ம் ஆண்டு எட்டய புரத்தில் சின்னச்சாமி ஐயருக்கும், இலட்சுமி அம்மாவுக்கும் மகனாகப் பிறந்தார். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் சுப்பையா. இவர் எட்டையபுரம் அரண்மனையில் ஜமீன்தார் முன்பாக கவி பாடி பாரதி என்ற பட்டப்பெயரைப் பெற்றார். பாரதிக்குப் பதின்னான்கு வயது நடந்துகொண்டிருந்த போது செல்லம்மாள் என்ற ஏழு வயதுப் பெண்ணைத் திருமணம் செய்து வைத்தனர்.

பெண்கல்வி, தேசவிடுதலை, பகுத்தறிவுவாதம், மனிதசமத்துவதம் குறித்து பாடல்களை எழுதிக்குவித்த வண்ணமிருந்தார் பாரதி. பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு, கண்ணன் பாட்டு போன்ற பாடல்கள் இவரின் கவிதைப் புலமைக்குச் சான்றுகளாகும். இந்திய நாட்டின் பழங்காலப் பெருமைகளையும், உயர்வையும் கேட்போர் செவிகளில் தேனூறப் பாடியுள்ளார். அத்தோடு பல தெய்வ பக்திப் பாடல்களையும் பாடி படைப்பாற்றலின் இமயமாக விளங்கினார்.

தமிழில் பாரதி தொடாத, தொடங்கி வைக்காத இலக்கியத் துறையே இல்லை என் மதிப்பிடலாம். தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், மலர்ச்சிக்கும், தாய்நாட்டின் எழுச்சிக்கும் தனது சக்திமிக்க கவிதைகளை அர்ப்பணித்த மகாகவி பாரதி 1921ம் ஆண்டு புகழுடம்பு எய்தினார்.

1. பாரதியாரின் இளமைக்காலப் பெயர் என்ன?

_______________________________________________

2. பாரதியாரின் பெற்றோரின் பெயர் என்ன?

_______________________________________________

3. “பாரதி” என்ற பட்டப் பெயர் யாரால் எங்கு வழங்கப்பட்டது?

_______________________________________________

_______________________________________________

4. பாரதியாரின் பாடல்கள் எதைக் குறித்து பெரும்பாலும் எழுதப்பட்டது?

________________________________________________________________

________________________________________________________________

5. பாரதியார் எந்த ஆண்டில் இறைவனடி சேர்ந்தார்?

________________________________________________________________

6. '1882ம் ஆண்டு' என்பதை சொல்லில் எழுதுக.

________________________________________________________________

7. இந்த உரைப்பகுதியில் சொல்லிலும், இலக்கத்திலும் உள்ள எண்களை இலக்கத்தில் எழுதுக.

________________________________________________________________

________________________________________________________________

8. உரைப்பகுதியில் குறிப்பிடப்படாத பாரதியார் இயற்றிய பாடல் ஒன்றின் பெயர் தருக.

________________________________________________________________

9. இமயம் என்பது என்ன?

________________________________________________________________

________________________________________________________________

(27 புள்ளிகள்)

10. ஒத்தசொல் தருக:

1. ஆண்டு ______________________________________
2. தொடக்கம் ______________________________________
3. அரண்மனை ______________________________________
4. மகன் ______________________________________
5. திருமணம் ______________________________________

(10 புள்ளிகள்)

2. குழம்பியிருக்கும் வாக்கியங்களை கருத்தமைய ஒழுங்குபடுத்தி எழுதுக:

1. பின் அம்மா அவளை கோவிலுக்குக் கூட்டிக்கொண்டு போனார்
2. அன்று கமலாவின் பிறந்தநாள்
3. கோவிலில் இருந்து திரும்பும் வழியில் பிறந்தநாள் கேக் வாங்கிக் கொண்டு வந்தார்கள்
4. காலை எழுந்ததும் வேலைக்குப் போகும் முன் அப்பா அவளை வாழ்த்தினார்

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

(8 புள்ளிகள்)

3. **'அ'** பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் வசனத்தை **'ஆ'** பகுதியில் தெரிந்து இணைக்கவும்.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி | 1. சான்றோன் எனக்கேட்ட தாய் |
| 2. எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் | 2. வாழிய வாழியவே |
| 3. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை | 3. சோற்றுக்கு ஆகுமா |
| 4. ஈன்ற பொழுதிலும் பெரிதுவக்கும் தன்மகனை | 4. மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு |
| 5. சொப்பனத்தில் கண்டசோறு | 5. பண்பும் பயனும் அது |

(10 புள்ளிகள்)

4. தொழிலுக்குரிய பெயரைத்தருக:

1. சிலை வடிப்பவர் ________________________________

2. விமானம் ஓட்டுபவர் ________________________________

3. ஆடு மேய்ப்பவர் ________________________________

4. கவிதை எழுதுபவர் ________________________________

5. பாடம் கற்பிப்பவர் ________________________________

(10 புள்ளிகள்)

5. அடைப்புக்குள் உள்ள சொல்லுடன் ‘ஆல்’, ‘ஓடு’, ‘உடன்’ என்ற உருபுகளில் பொருத்தமான உருபைச் சேர்த்து எழுதுக.

ஒளவையார் ஒரு பெண்புலவர். இவர் அஞ்சா ____________________ (நெஞ்சம்) வாழ்ந்தவர். இவர் அரசர்கள் ____________________ (பலர்) போற்றப்பட்டார். தமிழின் மீது அளவிலாப் பற்றுக் கொண்ட இவர் ஆத்திசூடியை இயற்றினார். (இவர்) ____________________ கொன்றைவேந்தன், நல்வழி ஆகிய நீதி நூல்களும் இயற்றப்பட்டன.

மேலும் ஒளவையார் ____________________ (குழந்தைகள்) அன்பாகப் பழகினார். குழந்தைகளுக்காக பல பாடல்களும் ____________________ (இவர்) இயற்றப் பட்டுள்ளன. இவரது செய்யுள்களை மக்கள் இன்றும் விரும்பிப் படிக்கின்றனர்.

(10 புள்ளிகள்)

6. பின்வரும் தலைப்பின் ஒன்றைத் தெரிந்து 15 வசனங்களுக்குக் குறையாது ஒரு கட்டுரை எழுதுக.

1. நீங்கள் கொண்டாடும் ஒரு பண்டிகை
2. தமிழ்ப் பாடசாலைக் கலைவிழாபற்றி இலங்கையில் இருக்கும் உமது அம்மம்மாவுக்கு / மாமாவுக்கு கடிதம்
3. போக்கு வரத்துத் துறை

(25 புள்ளிகள்)

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2010

வகுப்பு: ஏழு திகதி: 19.06.2010 நேரம்: 2 மணி

ஆசிரியர்: திருமதி சா.விஜயநாதன்

மாணவர் பெயர்:

________________________________________

1. பின்வரும் பந்திகளை கவனமாக வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக:

வசந்தன் படுக்கையைவிட்டு எழ மனமில்லாமல் இங்குமங்கும் புரண்டுகொண்டிருந்தார். அவரின் மனதில் ஏதோ விவரிக்க முடியாத அச்ச உணர்வு மேலோங்கி இருந்தது. அவரது மனநிலையைப் படம் பிடித்துக் காட்டுவது போல அப்போது கனத்த மழையும் பெய்து கொண்டிருந்தது. வசந்தன் ஒருவாறு தம்மைத் தாமே சமாளித்துக் கொண்டு படுக்கையை விட்டு எழுந்தார். காலைக் கடன்களை முடித்துக் கொண்டு காலை உணவை உண்பதற்காக சமையலறைக்குச் சென்றார். அப்போது சட்டென்று அவரது கவனம் தரையில் ஊர்ந்து சென்ற எறும்புகள் சிலவற்றின் மீது பதிந்தது.

சின்னஞ்சிறு எறும்புகள் பல ஒன்று கூடி ஒரு சிறு ரொட்டித் துண்டைத் தூக்கிச் செல்லமுயன்று கொண்டிருந்தன. வசந்தன் அதைக் கண்கொட்டாமல் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தார். இவற்றால் இக்காரியத்தைச் செய்ய முடிந்தால் “என்னாலும் இந்த நேர்முகத் தேர்வில் வெற்றி பெற முடியும்” என்ற நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டது. வேறு எந்தச் சிந்தனைக்கும் மனதில் இடம் கொடுக்காது அவர் அன்று அந்த நிறுவனத்திற்குச் சென்றார். அங்கு அவர் மிகச் சிறந்த முறையில் பேட்டி அளித்தார். அதனால், அவருக்கே அந்த வேலை கொடுக்கப்பட்டது. வசந்தன் தனது புதிய வேலையில் கண்ணும் கருத்துமாக செயல்பட்டார்.

அவர் விடாமுயற்சியுடன் கடினமாக உழைத்தார். தன்னம்பிக்கையுடன் தமது வேலைகளைச் சிறப்பாகச் செய்தார். அதனால், அவர் தனது மேலதிகாரிகளின் நம்பிக்கைக்குப் பாத்திரமானார். சாதாரண அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்த அவர் விரைவிலேயே அந்த நிறுவனத்தின் தலைமை நிர்வாகியாகப் பதவி உயர்வு பெற்றார்.

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக:

1. தூக்கம் கலைந்த பின்னும் ஏன் வசந்தன் படுக்கையைவிட்டு எழவில்லை?

_______________________________________________

_______________________________________________

2. சமையலறையில் வசந்தன் கண்ட காட்சி என்ன?

_______________________________________________

3. வசந்தன் கண்ட காட்சி எவ்வகையில் அவரது மனதிற்கு ஊக்கமளித்தது?

_______________________________________________

_______________________________________________

________________________________________________________________

4. நேர்முகப் பேட்டியை நடத்திய நிறுவனத்தினர் ஏன் வசந்தனை வேலைக்கு அமர்த்தினர்?

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

5. வசந்தனின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாய் இருந்த பண்புகள் மூன்று எழுதுக?

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

6. பிரித்து எழுதுக.

   1. மனமில்லாமல் ________________________________________
   2. இங்குமங்கும் ________________________________________
   3. மேலோங்கி ________________________________________
   4. சமையலறை ________________________________________
   5. தன்னம்பிக்கை ________________________________________

(20 புள்ளிகள்)

2. கீழே உள்ள சொற்களுள் பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து, கோடிட்ட இடங்களை நிரப்புக:

ஒரு நாள் அழகன் தன் வீட்டுக்கு ____________________ உள்ள ____________________ பூங்காவுக்கு ____________________ சென்றான். அவனுடன் ____________________ தம்பியும் சென்றான். அங்கு பூங்காவில் பல ____________________ மலர்கள் ____________________ பூத்திருந்தன. ____________________ மாமரத்து அடியில் ____________________ நின்றனர். அழகன் பூக்களைப் ____________________ வந்தான். அப்பூக்களைக் கொண்டு ____________________ கட்டினார்கள்.

**உலாவ, பறித்து, இளைய, அருகே, கொத்துக் கொத்தாக, அழகிய, உயர்ந்த, மாலை, வர்ண, அவர்கள்**

(20 புள்ளிகள்)

3. கீழ்வரும் சொற்களை மூன்று காலங்களிலும் எழுதுக.

| | **இறந்தகாலம்** | **நிகழ்காலம்** | **எதிர்காலம்** |
|---|---|---|---|
| ஓடு | | | |
| வா | | | |
| செல் | | | |
| போ | | | |
| எடு | | | |
| பார் | | | |

(18 புள்ளிகள்)

4. கீழ்காணும் சொற்களை அவற்றின் பொருள் விளங்குமாறு வசனங்கள் எழுதுக:

6. அடி ____________________

ஆடி ____________________

7. மலை ____________________

மாலை ____________________

8. அணி ____________________

ஆணி ____________________

9. பனை ____________________

பானை ____________________

10. கலை ____________________

காலை ____________________

(20 புள்ளிகள்)

5. பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி 150 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக.

4. உமது பாடசாலை முதல் நாள் அனுபவம்
5. தொலைக்காட்சி (22 புள்ளிகள்)

____________________

____________________

____________________

____________________

____________________

____________________

____________________

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2010

வகுப்பு: எட்டு திகதி:- 19-06-2010 நேரம்: $2\frac{1}{2}$ மணித்தியாலம்

ஆசிரியர்: திருமதி மா சோமாஸ்கந்தன்

**மாணவர் பெயர்:-**

1. **கீழேவரும் உரைப்பகுதியை வாசித்துக் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.**

(15 புள்ளிகள்)

முருகன் என்றொரு சிறிய பையன் இருந்தான். அவன் ஒருநாள் சின்னத் தள்ளுவண்டியை வைத்து விளையாடிக்கொண்டிருந்தான். வண்டி சின்னதாக இருந்தாலும் மிகவும் அழகானதாக இருந்தது. அது முருகனுக்கு அவனது மாமா அன்போடு கொடுத்த பரிசு. அந்த வழியாக வந்த நண்பன் கண்ணன் முருகனிடம் வண்டியைத் தள்ளிப் பார்க்கத் தரும்படி கேட்டான். முருகனும் கொடுத்தான். கண்ணன் வண்டியை வாங்கி வேகமாகத் தள்ளியதால் ஒரு கல்லில் மோதி விட்டது. அதனால் வண்டியின் முன் பகுதி உடைந்து போயிற்று. முருகனுக்கு கோபம் வந்தது. “ என்னடா முட்டாள், வண்டியை இப்படியா உடைப்பது? ” எனக் கோபமாகக் கேட்டான். உடனே கண்ணனுக்குக் கோபம் வந்தது. இருவரும் ஒருவரை ஒருவர் திட்டிக்கொண்டு சண்டைபோட்டனர்.

இவற்றைப்பார்த்த எதிர்வீட்டு வள்ளுவர் அவர்கள் இருவரையும் தனது வீட்டிற்கு அழைத்தார். இருவரும் வந்தார்கள். ஒரு தட்டில் வைத்த ஐந்து மாம்பழங்களையும் ஐந்து மாங்காய்களையும் முன்னால் நீட்டினார். ஆளுக்கொன்று எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார். இருவரும் நன்றாகப் பழுத்த பழங்களை எடுத்துக்கொண்டனர். வள்ளுவர் சிறுவர்களிடம் ஏன் காயை எடுக்காமல் பழத்தை எடுத்தீர்கள் என்று கேட்டார். அவர்கள் “பழம் இனிக்கும், காய் புளிக்கும். அதனால் பழத்தை எடுத்தோம்” என்றனர். வள்ளுவர் உடனே “ உண்மை தான். இனிக்கிற பழம் இருக்கும் போது புளிக்கின்ற காயை யாரும் விரும்ப மாட்டார்கள். அதேபோலத்தான் நாம் பேசும் சோற்களும். எவ்வளவோ நல்ல சொற்கள் இருக்கும் போது மற்றவர்கள் மனதை நோகடிக்கும் சொற்களைப் பேசலாமா? அப்படிப் பேசுவது பழத்தை – கனியை – விட்டுக் காயை எடுப்பது போலல்லவா? ” எனக் கேட்டார். சிறுவர்களும் அவர் கூறியதிலிருந்த உண்மையை அறிந்து கொண்டு இனிமையாகவே இனிப்பேசுவோம் என்று கூறிச்சென்றனர்.

“ இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று ” என்பது வள்ளுவர் வாக்கு.

i. முருகனுக்கு என்ன பரிசாகக் கிடைத்தது? (3 புள்ளிகள்)

__________________________________________

ii. இக்கதையில் வரும் ஒரு குறளைக் கூறுக? (3 புள்ளிகள்)

__________________________________________

__________________________________________

iii. முருகனுக்கு ஏன் கோபம் வந்தது? (3 புள்ளிகள்)

___________________________________________

___________________________________________

___________________________________________

iv. வள்ளுவர் தட்டில் வைத்து கண்ணனிடமும் முருகனிடமும் நீட்டியது என்ன? (3 புள்ளிகள்)

___________________________________________

___________________________________________

___________________________________________

v. இக்கதையில் வரும் பழத்தையும் காயையும் வள்ளுவர் எவற்றுடன் ஒப்பிடுகிறார்? (3 புள்ளிகள்)

பழம்: ___________________________________________

காய்: ___________________________________________

2. **அடைப்புக்குறிக்குள் உள்ள சொல்லுடன் பொருத்தமான வேற்றுமை உருபைச் சேர்த்துக் கோட்டில் எழுதுக.** (10 புள்ளிகள்)

1. கண்ணனின் மாமா ____________________ அவுஸ்திரேலியாவைச் சுற்றிப் பார்க்க வந்தார். (கனடா)
2. அம்மா ____________________ ஒரு பரிசுப்பொருள் வாங்கிக் கொண்டு வந்தார். (வாணி)
3. வாசுகி கணினியை இயக்கும் முறைகளைக் கற்றுத் தருமாறு தன் ____________________ கேட்டாள். (ஆசிரியர்)
4. ____________________ சிநேகிதி பிறந்த நாள் பரிசைப் பிரித்துப் பார்த்தாள். (கண்ணகி)
5. சர்வகலாசாலையில் ஆசிரியப் ____________________ படிக்கும் வாணி விரைவில் ஆசிரியராவாள் என எதிர்பார்க்கப்படுகிறாள். (படிப்பு)

3. **கீழ்வரும் தனிவாக்கியங்களை இணைத்து ஒரு வாக்கியமாக எழுதுக.**

(10 புள்ளிகள்)

1. i) நான் பாடசாலைக்குச் சேன்றேன்.
   ii) நான் தமிழறிவுப் போட்டியில் பங்குபற்றினேன்.

   ______________________________

   ______________________________

   ______________________________

2. i) சனிக்கிழமைகளில் தமிழ்ப்பாடசாலையில் தமிழ்மொழிவாழ்த்துப் பாடுவோம்.
   ii) அங்கு கல்லூரி கீதம் பாடுவோம்.

   ______________________________

   ______________________________

   ______________________________

3. i) கண்ணன் ஓட்டப் பந்தயத்திற்குச் சென்றான்.
   ii) அவன் முதலிடத்தைப் பெற்றான்.

   ______________________________

   ______________________________

   ______________________________

4. i) வணிகன் வெளிநாட்டிற்குச் சென்றான்.
   ii) அங்கு பொருட்களை விற்றுப் பணம் சம்பாதித்தான்.

   ______________________________

   ______________________________

   ______________________________

5. i) காவலர் வீட்டிற்குள் நுழைந்தனர்.
   ii) அஙகு திருடனைப் பிடித்துக் கைது செய்தனர்.

   ______________________________

   ______________________________

   ______________________________

4. **பின்வரும் பந்தியிலுள்ள பெண்பாற் சொற்களை ஆண்பாலாக மாற்றிப் பந்தியை மீண்டும் எழுதுக.** (10 புள்ளிகள்)

அரசி பிச்சைக்காரியைப் போல் வேடம் போட்டாள். பின் நகரைச் சுற்றி வந்தாள். முதலில் உயர்ந்த மாளிகையிருந்த பகுதிக்குச் சென்றாள். அவள் பணக்காரி ஒருத்தியினுடைய வீட்டுக் கதவைத் தட்டினாள். வீட்டுக்காரி வந்து கதவைத் திறந்தாள். பின் பிச்சைக்காரி என எண்ணித் துரத்தினாள். பின்பு ஒரு ஏழையின் வீட்டிற்குச் சென்றாள். அவள் அரசியை வரவேற்றாள். தான் உண்ண இருந்த உணவைக் கொடுத்தாள். அரசி மகிழ்ச்சியடைந்து ஏழைக்குப் பொன்னும் பொருளும் கொடுத்தாள்.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

5. **பின்வரும் சொற்களுக்கு ஏற்ற ஆங்கிலச் சொற்களை எழுதுங்கள்.** (5 புள்ளிகள்)

- **தமிழ் கல்வி நிலையம்** ____________________
- **தமிழ் மொழி** ____________________
- **ஊடகங்கள்** ____________________
- **தேசிய கீதம்** ____________________

- உயர்தரப்பாடசாலை ______________________

6. "அ" பகுதியிலுள்ள சொற்களுக்கு ஏற்ற முடிக்கும் சொற்களை "ஆ" பகுதியிலிருந்து தெரிவு செய்து இணைத்துக் காட்டுக. (10 புள்ளிகள்)

| அ | | ஆ |
|---|---|---|
| vi. | தமிழ் அறிவுப் | வெளியீடு |
| vii. | நூல் | பிரதி |
| viii. | கொடிவார | சஞ்சிகை |
| ix. | கையெழுத்துப் | போட்டி |
| x. | புத்தக | கீதம் |
| xi. | கல்லூரி | நிலையம் |
| xii. | மாதாந்த | பத்திரிகை |
| xiii. | தினசரிப் | விழா |
| xiv. | சனிக் | மாதம் |
| xv. | தை | கிழமை |

7. இனஞ்சேரா சொல்லைத் தேர்ந்தெடுத்து அடைப்புக்குறியினுள் எழுதுக. (5 புள்ளிகள்)

1. (i) வடக்கு (ii) மேற்கு (iii) கிழக்கு (iv) மேல் [ ]

2. (i) மாலை (ii) பகல் (iii) வெயில் (iv) காலை [ ]

3. (i) திங்கள் (ii) தை (iii) பங்குனி (iv) சித்திரை [ ]

4. (i) கிளி (ii) குயில் (iii) குருவி (iv) நரி [ ]

5. (i) ரப்பர் (ii) வெள்ளி (iii) தங்கம் (iv) செம்பு [ ]

**8. கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வானொலியில் அறிவிப்பதற்கு ஏற்றவடிவத்தில் பிறந்தநாள் வாழ்த்து ஒன்றைத் தயாரிக்குக.**

(15 புள்ளிகள்)

| | |
|---|---|
| பிறந்தநாள் கொண்டாடுபவர் | கண்ணன் |
| பெற்றோர் | சண்முகம்<br>கமலா |
| கொண்டாடும் இடம் | நகரமண்டபம் (Strathfield) |
| காலம் | 12-06-2010 |
| வாழ்த்துபவர்கள் | அன்பான பெற்றோர், ஆசைஅக்கா, பெரிய அண்ணா, சின்னத்தம்பி, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, உற்றார், உறவினர், நண்பர்கள் |

உங்களுக்கு உதவக்கூடிய சொற்கள்:

பல்லாண்டு காலம், பிறந்தநாள், இன்று பிறந்தநாள், பல்கலையும் கற்று, சீரும் சிறப்புடன்

9. **பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு தலைப்பைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் சுயசரிதை எழுதுக.** (20 புள்ளிகள்)

ix. பட்டுப்பாவாடை

x. தங்கச்சங்கிலி

xi. முறிந்த குடை

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2010

வகுப்பு: ஒன்பது திகதி:- 19-06-2010 நேரம்: $2\frac{1}{2}$ மணித்தியாலம்

ஆசிரியர்: திரு ச தேவராசா

**மாணவர் பெயர்:-**

1. **பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**
(20 புள்ளிகள்)

தமிழ் இலக்கியத்தின் வகைகளாக கவிதை, சிறுகதை, நாவல், திறனாய்வு (விமர்சனம்), திரைப்படம் என்பன விளங்குகின்றன. இவற்றுள் திரைப்படம் என்பது ஏனைய இலக்கிய வகைகளை உள்ளடக்கிய அல்லது அவற்றோடு தொடர்புபட்ட நவீன இலக்கிய வடிவமாக விளங்குகின்றது. கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் போன்ற இலக்கியங்களோடு தொழில் நுட்பமும் சேர்ந்து திரைப்படமாக பரிணமிக்கிறது.

சிறுகதை அல்லது நாவல்களிலிருந்து எடுக்கப்பட்ட கதையை அல்லது கதாசிரியர்கள் எழுதிய கதையை அடிப்படையாக வைத்து உரையாடல் எழுதி, கதாநாயகன், கதாநாயகி அல்லது பிரதான பாத்திரங்கள் பாடுவதற்கு பாடல்களை உருவாக்கி, இசை அமைத்துப் பாடி நடிகர்களை நடிக்க வைத்து தொழில் நுட்பத்தையும் சேர்த்து பெரும் பணம் செலவழித்து தமிழ்த்திரைப்படங்களை எடுக்கிறாகள். ஆரம்பத்தில் நாடகங்களே நடாத்தப்பட்டன. பிற்காலத்திலேயே அந்த நாடகங்களை அடியொற்றி திரைப்படங்கள் உருவாயின. இதனாலேயே “நாடகம் என்ற தாய் பிரசவித்த குழந்தையே திரைப்படம்” என்று கூறுகிறார்கள். இத்திரைப்படங்களின் அல்லது படைப்பிலக்கியங்களின் (நாவல்கள், நாடகங்கள், சிறுகதைகள்) குறை நிறைகளை ஆராய்கின்ற போது திறனாய்வு அல்லது விமர்சனம் என்ற இலக்கிய வடிவம் தோன்றுகின்றது.

நல்லவன் வெல்வான். கெட்டவன் தோற்பான். அறம் வெல்லும். மறம் தோற்கும். நியாயத்தின் பக்கம் நிற்பவர்களுக்கு இறுதியில் நன்மை ஏற்படும். அநியாயத்தின் பக்கம் நிற்பவர்களுக்கு தீமை ஏற்படும் என்ற புராண, இதிகாசங்களின் அடிப்படைக் கோட்பாட்டிலேயே பெரும்பாலான தமிழ்த்திரைப்படங்கள் கட்டியெழுப்பப்படுகின்றன. கதாநாயகனும் அவனது நண்பர்களும் நன்மை செய்பவர்களாகவும், வில்லனும் அவனது கூட்டத்தினரும் தீமையின் மொத்த உருவங்களாகவும் சித்தரிக்கப்படுகின்றனர். கதாநாயகி நன்மை செய்யும் கதாநாயகனுக்கு உதவி செய்பவளாகவும், வில்லனால் கொடுமைப்படுத்தப்படுபவளாகவும் பெரும்பாலான தமிழ்ப்படங்களில் காட்டப்படுகின்றாள். பெரும்பாலான மக்களால் விரும்பிப் பார்க்கப்படுகின்ற இலக்கிய வடிவமாக திரைப்படங்கள் விளங்குவதனால் அவை ஜனரஞ்சக இலக்கியங்கள் என்றும் கூறப்படுகின்றன.

i. தமிழ் இலக்கியத்தின் ஆறு வகைகளும் எவை? (3 புள்ளிகள்)

______________________________

______________________________

ii. திரைப்படங்கள் எவ்வாறு ஏனைய இலக்கிய வடிவங்களோடு தொடர்புடையதாக விளங்குகின்றது? (3 புள்ளிகள்)

______________________________

______________________________

______________________________

iii. “நாடகம் என்ற தாய் பிரசவித்த குழந்தை திரைப்படம்” என்று கூறுவதற்கான காரணம் யாது? (3 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

iv. திறனாய்வு இலக்கியம் என்பது என்ன? (3 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

v. “தர்மம் வெல்லும் அதர்மம் தோற்கும்” என்ற புராண, இதிகாசக் கருத்தை அடிப்படையாகக் கொண்டே பெரும்பாலான தமிழ்த்திரைப்படங்கள் உருவாகின்றன. நீங்கள் பார்த்த ஒரு திரைப்படத்தின் கதையை இக்கூற்றுடன் தொடர்பு படுத்தி எழுதுக? (8 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

**2. பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி ஆறு சொற்களுக்குக் குறையாத வாக்கியங்கள் எழுதுக.** (20 புள்ளிகள்)

i. தமிழ்மொழி:

ii. அன்பு:

iii. வெறுப்பு:

iv. முரண்பாடு:

v. பக்தி:

vi. நாடகம்:

vii. வாழ்க்கை:

viii. குதூகலம்:

ix. படிப்பித்தார்:

x. யுத்தம்:

**3. கீழே எழுதப்பட்டுள்ள நிகழ்வை மேலும் 70 சொற்களுக்குக் குறையாமல் எழுதி நிறைவு செய்க.** (20 புள்ளிகள்)

அன்று ஒரு சனிக்கிழமை. நானும், எனது பெற்றோர்களும், தங்கை சுமதியும் நீல மலைக்குச் சென்றோம். அங்கே சென்று, மூன்று சகோதரிகள் என்று அழைக்கப்படும் குன்றுகளின் அழகை ரசித்தோம். கம்பி வாகனத்தில் அந்தப் பள்ளத்தாக்கின் கீழே சென்று, மேலே வந்து ஆனந்தம் அடைந்தோம். மாலை வேளையானதும் பற்றைகளினூடாக நடக்க விரும்பினேன். அம்மா போக வேண்டாம் என்று தடுத்தார். ‘‘கெடுகுடி சொற்கேளாது’’ என்ற பழமொழிக்கேற்ப நான் அம்மாவின் சொற்களை மதிக்காது அடர்ந்த புதர்களினூடாக நடந்து சென்றேன். ஒரு மணித்தியாலம் நடந்திருப்பேன். திரும்பிச்செல்ல வழி தெரியவில்லை. திரும்பிய பக்கமெல்லாம் பற்றைக் காடு. கையடக்கத் தொலைபேசியையும் மகிழுந்தில் வைத்து விட்டு வந்து விட்டேன்.

4. அவுஸ்திரேலியாவில் அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் சங்கம் கலப்பை என்ற காலாண்டுச் சஞ்சிகையை வெளியிடுவதன் மூலமும், வருடந்தோறும் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகளை நடாத்துவதன் மூலமும் தமிழ்த் தொண்டாற்றி வருகின்றது. இச்சங்கம் செய்யும் சேவைகளினால் தமிழ் மாணவர்களுக்கும், தமிழ் மக்களுக்கும் ஏற்படும் நன்மைகளை விளக்கி, மேற்படி சங்கத்தைப் பாராட்டி, சங்கத்தின் இணைப்பாளர் வைத்திய கலாநிதி. பொன். கேதீஸ்வரன் அவர்களுக்கு 100 சொற்களுக்குக் குறையாது ஒரு கடிதம் எழுதுக.

(20 புள்ளிகள்)

5. **பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.** (20 புள்ளிகள்)

xii. நான் கண்ட ஒரு பயங்கரமான கனவு.

xiii. ஹோம்புஷ் தமிழ் பாடசாலையின் கலைவிழா 2010.

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2010

வகுப்பு: பத்து திகதி:- 19-06-2010 நேரம்: $2\frac{1}{2}$ மணித்தியாலம்

ஆசிரியர்: திருமதி பு புருஷோத்தமர்

**மாணவர் பெயர்:-**

**1. கீழ்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**
(20 புள்ளிகள்)

இன அடையாளம் என்பது எம் எல்லோருக்கும் முக்கியமானது. இன்று புலம்பெயர்ந்து வாழும் சூழலில் எமது இன, மொழி அடையாளங்கள் தான் நாம் தலை நிமிர்ந்து வாழ்வதற்கு அவசியமானதாகும். நமது தமிழ் மொழி மிகநீண்ட வரலாற்றையும் இலக்கியச் செழுமையையும் கொண்ட பெருமைமிக்க மொழி. செம்மொழி அந்தஸ்த்தையும் பெற்று சிறப்புற்று நிற்கும் மொழி. நமது மொழியின் தொன்மைச் சிறப்பையும் பெருமையையும் நாம் ஒவ்வொருவரும் அறிய வேண்டியதும் பெருமை கொள்ள வேண்டியதும் தமிழைக் கற்றுப் பேண வேண்டியதும் வளர்த்துக் காக்க வேண்டியதும் நமது தலையாய கடமை.

தமிழர்கள் தாம் ஒரு காலத்தில் நினைத்தேயிராத நாடுகளில் இன்று குடியேறி, ஒரு காலத்தில் பேசுவோம் என்று கற்பனை பண்ணியிராத மொழிகளை இன்று பேசுகிறார்கள். ஜேர்மன், பிரெஞ்சு, ரஷ்ய, சுவீடிஷ், நோர்வேஜிய, டனிஷ், போர்த்துக்கேய, டச்சு மொழிகள் என்று பலமொழிகளைப் பேசி அந்தந்த நாடுகளில் வாழ்கிறார்கள். வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்தாலும் உறவினர்களும் நண்பர்களும் தமக்குள் உறவாட உதவும் மொழி தமிழே. அடுத்தடுத்த சந்ததியினர் தமிழை மறந்தால் பல நாடுகளில் சிதறி வாழும் உறவினர்களும் நண்பர்களும் ஒருவரோடு ஒருவர் என்ன மொழியில் பேசமுடியும்? ஆங்கிலம் எல்லா நாடுகளிலும் பயன்படுத்தப்படுவதில்லை என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

அதைவிட மொழியியலாளர் பலரும் வற்புறுத்திக் கூறும் உண்மை என்ன தெரியுமா? நீங்கள் மொழியை இழந்தால் பின்னர் உங்கள் பண்பாட்டை இலகுவாக இழந்து விடுவீர்கள் என்பதே. பிள்ளைகள் தமது தாய்மொழியைப் பேச உதவுங்கள். அதற்கு நேரம் ஒதுக்குங்கள் என்கிறார்கள். ‘‘எமது மொழியை அதிகம் பயன்படுத்தாது விட்டால் அது விரைவில் மறந்து போய் விடும் என்றும் பிற்காலத்தில் அது அவர்களை கவலையில் ஆழ்த்தும்’’ என்றும் கூறுகிறார்கள்.

ஆங்கிலத்தில் கல்வி கற்கும் பிள்ளைகளுக்குத் தமது தாய்மொழியை அறிந்திருப்பது மேலதிகமாகச் சிந்திக்கும் ஆற்றலை வளர்க்குமே தவிர எவ்வித குழப்பத்தையும் ஏற்படுத்தாது. தாய்மொழி என்பது நாம் நினைப்பதை விட மிகப் பெறுமதி வாய்ந்தது. அதனைப் பணப்பெறுமதியுடனோ தொழில் தகைமையுடனோ இணைத்துப் பார்ப்பது சற்றும் பொருத்தமற்றதொன்றாகும். ஒருவரின் அடையாளத்தில் மொழி என்பது முக்கியமானது என்பதை நாம் மறக்கவோ, மறைக்கவோ, மறுக்கவோ முடியாது என்று கூறலாம்.

புலம் பெயர்ந்த தமிழர் தமிழைக் கற்பதும் பேணுவதும் வளர்ப்பதும் முக்கியம் என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்வோம்.

i. இவ்வுரைப்பகுதியில் கூறப்பட்ட பிரதான கருத்து என்ன? (2 புள்ளிகள்)

________________________________________

________________________________________

________________________________________

ii. எமது மொழி பற்றி இங்கு சொல்லப்பட்ட முக்கிய சிறப்பம்சங்கள் தருக? (3 புள்ளிகள்)

iii. இன்று புலம்பெயர்ந்த தமிழர்கள் எவ்வெவ் மொழிகளையெல்லாம் பேசுகிறார்கள்? (4 புள்ளிகள்)

iv. புலம் பெயர்ந்து வாழும் நாம் நமது மொழியை அறிந்திருக்க வேண்டிய அவசியம் என்ன? (3 புள்ளிகள்)

v. மொழியியலாளர்கள் மொழி பற்றி என்ன கருத்தைத் தெரிவித்துள்ளார்கள்? (4 புள்ளிகள்)

vi. தமது எதிர்காலச் சந்ததியினர் எதிர்கொள்ளக் கூடிய சிக்கல்கள் என்ன என்று நினைக்கிறீர்? அவற்றை எவ்வகையில் தீர்த்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறீர்? உமது கருத்தை எழுதுக.

(4 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

2. பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக.

(20 புள்ளிகள்)

| | | | |
|---|---|---|---|
| பணம் | தேநீர் கோப்பி | பார்க்க | வாங்கவேண்டுமா? |
| பாவனை | குப்பையில் | எளிதானது | கூடியது |
| யோசிக்கவில்லை | கடல்வாழ் | சாப்பிடுகிறோம் | எறிந்து விடுகிறோம் |
| உலகையே | வடிந்து செல்ல | திமிங்கிலம் | சேர்ந்துவிட்டன |
| மக்களின் | அச்சுறுத்தும் | ஐம்பது | கறிகள் |

பிளாஸ்ரிக் (plastic) பொருட்களின் ____________________ இன்று மிகவும்

அதிகரித்துவிட்டது. பயன்படுத்துவதற்கு ____________________ என்று தான்

பிளாஸ்ரிக்கை அதிகம் பயன்படுத்த ஆரம்பித்தார்கள். ஆனால் பயன்படுத்திய பின்

____________________ வீசப்பட்ட பிளாஸ்ரிக் என்னவாகிறது என்பதை முதலில்

யாரும் ____________________. இன்று ____________________ பிரச்சனையாக

பிளாஸ்ரிக் கழிவு எழுந்துள்ளது.

பிளாஸ்ரிக் மற்றக் குப்பைகளைப் போல மண்ணில் மக்கக் ______________________ அல்ல. மண்ணில் அது அப்படியே இருப்பதால் மழைநீர் நிலத்துக்கடியில் ______________________ முடியாமல் தங்க நேருகிறது. இந்தப் பிளாஸ்ரிக் பயன்பாடு அதிகரித்து ______________________ ஆண்டுகள்தான் ஆகிறது. அதற்குள் இதன் பாதிப்புக்கள் நிலத்தோடு நின்றுவிடவில்லை. ______________________ உயிரினங்களான மீன்கள், சுறா, ______________________ மற்றும் கடல்தாவரங்களின் இனப்பெருக்கமும் பாதிக்கப்பட்டுள்ளது. இவற்றை உண்டு வாழும் ______________________ நிலையையும் சிந்தித்து ______________________ வேண்டியுள்ளது.

பிளாஸ்ரிக் தட்டில் ______________________, பிளாஸ்ரிக் குவளையில் ______________________ குடிக்கிறோம். சுடச்சுடச் சாப்பாடு, சாம்பார், ______________________ என்று பொலித்தீன் பைகளில் வாங்கிக்கொள்கிறோம். உண்டபின் பைகளைத் தூக்கி ______________________. உண்ட சாப்பாட்டுடன் பல இரசாயனப் பொருட்கள் எமது உடலில் ______________________ என்பதை மறந்து விடுகிறோம். இதற்கு மேலும் ______________________ கொடுத்து நோயை ______________________ என்று யோசியுங்கள்.

3. கீழே தரப்பட்டுள்ள பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் பயன்படுத்தி 40 சொற்களுக்குக் குறையாமல் பந்தி ஒன்று அமைக்குக.

(10 புள்ளிகள்)

| | | | |
|---|---|---|---|
| வரைந்த | வளர்த்த | செய்த | குடித்த |
| வைக்கப்பட்டிருந்த | தொங்கவிட்டாள் | உடைந்தது | பார்த்தது |

**4. பின்வருவனவற்றுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

(20 புள்ளிகள்)

ய. "HSC உயர்தரப் பரீட்சைக்குத் தமிழை ஒரு பாடமாக எடுப்பது நன்மை தரும்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

டி. உமது பாடசாலைக் கலைவிழா பற்றிய அனுபவத்தை கட்டுரையாக எழுதுக.

உ. உமது நண்பி / நண்பன் தனது பாடசாலை 10ம் ஆண்டுப் பரீட்சையில் மிகஉயர் சித்தி பெற்று பெருமைப்படுத்தப்பட்டார். அவருக்கு வாழ்த்துத் தெரிவித்துக் கடிதம் ஒன்று எழுதுக. [கடித அமைப்புப் பேணப்பட வேண்டும். பந்தி பிரித்து எழுதப்பட வேண்டும்.]

5. **கேட்டுக் கிரகித்துப் பதிலளித்தல்.**

(மொத்தம் 15 புள்ளிகள்)

i. உடலை இயக்கும் உயிர் எப்படிப்பட்டதென்று கேட்டீர்?

(3 புள்ளிகள்)

ii. எதைப் பிராணசக்தி என்றோம்?

(2 புள்ளிகள்)

iii. பிராணசக்தி எமது உடலில் என்ன வேலைகளைச் செய்கிறது?

(2 புள்ளிகள்)

iv. பிராணசக்தியை நாம் எங்கிருந்து பெற்று நமது உடலில் பெருக்க முடிகிறது?

(3 புள்ளிகள்)

v. பிராணாயாமப் பயிற்சி என்றால் என்ன?

(2 புள்ளிகள்)

vi. பிராணாயாமப் பயிற்சியை முறைப்படுத்தியோர் யாவர்?

(2 புள்ளிகள்)

vii. இப்பந்திக்கு ஒரு தலைப்பிடுக.

(1 புள்ளிகள்)

6. **அட்டவணையை நிரப்புக** (மொத்தம் 15 புள்ளிகள்)

| | |
|---|---|
| காலை உணவை அலட்சியப்படுத்துவோர் கூறும் காரணங்கள் மூன்று தருக.<br>(4 புள்ளிகள்) | |
| காலை உணவைத் தவிர்ப்பதால் ஏற்படும் பாதிப்புகள் நான்கு தருக.<br>(4 புள்ளிகள்) | |
| மாச்சத்து நிறைந்த உணவுகள்<br>(1 புள்ளி) | |
| புரதச்சத்து நிறைந்த உணவுகள்<br>(1 புள்ளி) | |
| விற்றமின் சி (C) அதிகமாகவுள்ளது<br>(1 புள்ளி) | |
| நாள்முழுவதும் உற்சாகமாக இருக்க வழிகள் நான்கு தருக.<br>(4 புள்ளி) | |